பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 12 2025 TUESDAY 6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** காசி தமிழ்ச் சங்கமம் விழா வாரணாசியில் இன்று வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்கியது.

**2)** பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கு 21-ஆவது தவணையாக 432 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

**3)** மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களுக்கு ஹெக்டேருக்கு 20 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

**4)** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக உடனான கூட்டணியில் பிஜேபி உறுதியுடன் இருப்பதாக அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

**5)** திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>- இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>

காசி தமிழ்ச் சங்கமம் விழாவை உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் இன்று மாலை வாரணாசியில் தொடங்கிவைத்தார்.

மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி உள்ளிட்டோர் இவ்விழாவில் கலந்துகொண்டுள்ளனர்.

ஒரே பாரதம் — உன்னத பாரதம் என்ற நோக்கத்துடன் காசி தமிழ் சங்கமம் நடைபெறுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இவ்விழாவில் பங்கேற்கும் அனைவரையும் வரவேற்பதாக கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காசி தமிழ் சங்கமம் விழா என்றென்றும் நமது நினைவுகளை விட்டு அகலாதவாறு கொண்டாடி மகிழ்வோம் என்று கூறியுள்ளார்.

தொன்றுதொட்டு தொடர்ந்துவரும் கலாச்சார தொடர்பையும், காலத்தையும் இணைக்கின்ற காசி தமிழ் சங்கமம் தமிழ் கற்கலாம் என்ற உயரிய கருத்தோடு தொடங்குவதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சென்னை, கோவை, கன்னியாகுமரியிலிருந்து ஏழு சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே இயக்குகிறது.

காசி சங்கம இரண்டாவது சிறப்பு ரயில் 264 பயணிகளுடன் இன்று சென்னையிலிருந்து புறப்பட்டது.

நாளை கோயம்புத்தூரில் இருந்தும், வரும் 6-ஆம் தேதி சென்னையிலிருந்தும், 7-ஆம் தேதி கன்னியாகுமரியில் இருந்தும், 9-ஆம் தேதி கோயம்புத்தூரில் இருந்தும், 12-ஆம் தேதி சென்னையில் இருந்தும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

மறுமார்க்கத்தில் பனாரசிலிருந்து வரும் 5-ஆம் தேதிமுதல், காசி தமிழ் சங்கம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாகவம் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

கார்த்திகை தீப திருநாள் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில், கார்த்திகை தீபம் ஏற்றி வழிபடுவது பழந்தமிழர் மரபு என்றும், பருவமழை குறைந்து குளிர்காலம் தொடங்குவதன் அறிகுறியாக தமிழக மக்கள் தீபம் ஏற்றி வழிபடுவதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் **4** லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் பதில் அளித்த அவர், தமிழகத்தில் **21-**ஆவது தவணையாக **432** கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் செலுத்தப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

மூன்று தவணைகளாக வருடந்தோறும் ஆறாயிரம் ரூபாய், விவசாயிகளுக்கு வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை **21** தவணைகளாக இந்த தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் உள்ள விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்தில் நாட்டில் உள்ள **9** கோடி விவசாயிகளுக்கு **21**வது தவணையாக பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களுக்கு ஹெக்டேருக்கு 20 ஆயிரம் ரூபாய், நிவாரணம் வழங்கப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 85 ஆயிரம்து 521 ஹெக்டேர் அளவிலான விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

முழுமையாக கணக்கெடுப்பு நடத்தி, நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட திருவள்ளுவர் நகரில் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று நேரில் பார்வையிட்டார்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உணவு மற்றும் தேவையான உதவிகளை செய்து தருமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

நோய் தொற்று பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவ முகாம்களை அமைக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு சேகர்பாபு, தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் நீரை அகற்றும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக கூறினார்.

சோழிங்கநல்லூர், மகாலிங்கபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீர் பம்புசெட்டுகள் மூலமாக அகற்றப்பட்டு வருவதாகவும் திரு சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக உடனான கூட்டணியில் பிஜேபி உறுதியுடன் இருப்பதாக அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக-வில் உட்கட்சிப்பூசல் இருப்பதாக கூறுவதை தாங்கள் ஏற்கவில்லை என்றும் கூறினார்.

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றுவதில் எவ்வித நடைமுறை சிக்கலும் இல்லை என்று திரு நயினார் நாகேந்திரன் உறுதிபட தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், **99** புள்ளி நான்கு ஐந்து சதவீத விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, இதுவரை **6** கோடியே **37** லட்சத்து **59** ஆயிரத்து **445** வாக்காளர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், **94** புள்ளி மூன்று இரண்டு சதவீத விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, திருப்பூர் மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கணக்கீட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு மணீஷ் நர்னவரே கேட்டுக்கொண்டுள்ளார்.

(*Voice Byte – **சபரிஷ்** – 41 - Sec)*

<<<<<<>>>>>

தமிழக கடற்கரையையொட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு தெற்கு - தென்கிழக்கே 60 கிலோமீட்டர் தொலைவில் நிலை கொண்டிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், அடுத்த 24 மணிநேரத்தில் திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

*(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 68 Sec. )*

தமிழக கடலோரம் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுவதாகவும் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நீலகிரியில் தனியார் நிறுவனங்களின் நிதியுதவியுடன் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட குடிநீர் ஏடிஎம்-மை மாவட்ட ஆட்சியர் திருமதி லஷ்மி பவ்யா தண்ணீரு இன்று தொடங்கிவைத்தார்.

---------------

காஞ்சிபுரத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கிடங்கினை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஸ்விட்சர்லாந்தை எதிர்கொள்கிறது.

மதுரையில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>